ஐரோப்பிய சுரம் அமைந்த

தேவதோத்திர சங்கீத

கீர்த்தனம்.

இஃது

புதுவை அதிமேற்பிராசனச் சுதேசக்குருக்களிற் சிலரால்

செய்யப்பட்டது.

PERMISSU SUPERIORUM.

MADRAS.

AVE MARIA PRESS—PUDUPET.

1892.

All Rights Reserved.

பாயிரம்.

புதுவை சென்மவிராக்கினி மாதா கோவில் அச்சுக்கூடத்தில் 1882. ௵ பிரசுரமான தேவதோத்திரசங்கீத கீர்த்தனம் என்னும் புஸ்தகத்தைப் பலரும் பார்த்திருப்பார்கள். இதில் ஒவ்வொரு பாட்டுக்கும் சாஸ்திரப்படி தமிழ்ச்சுரம் அமைத்திருக்கிறது. இந்த தமிழ்ச் சுரங்களையெல்லாம் ஐரோப்பிய சங்கீதத்தில் ஐந்து கோடுகளில் வழங்குஞ் சங்கீதக் கிரமப்படி அமைத்து அச்சிட்டுப் பிரசுரப்படுத்துவதாக அப்புஸ்தகத்தின் பாயிரத்தில் சொல்லப்பட்டது. இப்படி இந்தச்சுரங்கள் வெகுநாளாய் அமைக்கப்பட்டிருந்தும் அதற்கான அச்சுக்கருவிகள் இந்தப்பக்கங்களில் இல்லாததால் அச்சிடக் கூடாமையா யிருந்தது. தற்காலம் சென்னை கவர்ன்மெண்ட் ஆபீஸ் பாரிய உத்தியோகஸ்தரும் கும்பகோணத்து தனவான் அண்ணாசாமிமுதலியார் குமாரருமாகிய M. A. சின்னசாமி முதலியாரவர்களால் ஏற்பட்டிருக்கும் "ஆவே மரியா" அச்சுக்கூடத்தில் இவரது பேருபகாரத்தால் இவைகளை அச்சிட்டுப் பிரசுரம்பண்ணும் அதஷ்டங்கிடைத்தது.

இப்புஸ்தகத்தில் ஒரே இராகம் பலவிசை வந்திருப்பதாலும் இவைகளையெல்லாம் அச்சிடுவதால் புஸ்தகம் விரிவாவதுமன்றி செலவும் அதிகமாவதாலும் எல்லாப் பாடல்களையும் ஐரோப்பிய சுரத்தில் அச்சிடவில்லை. தெய்வ சித்தமிருந்து பொருளுதவியு மிருக்குமேயாகில் சிலவிசை பின்னால் அச்சிடக்கூடும்.

ஆரோகண் அவரோகணக் கடசியில் "குறிக்கப்படும்விதம்" "வேறு சுரங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தில் அறியவேண்டியது யாதெனில் ;—(♭ அரைச்சுரந் தாழுங்குறி. ♯ அரைச்சுர உயர்வின் குறி) இக்குறிகள் ஐரோப்பிய சங்கீத வரிசைக் கிர

மப்படி அமைக்கப்படாமல் தமிழ்ச் சங்கீத வரிசைக் கிரமப்படி அமைக்கப் பட்டிருக்கின்றன *. ஆரோகண அவரோகணங்களில் சாதாரணமாய் வருஞ் சுரங்களுக்கு விபரீதமாய் வருஞ் சுரங்களை "வேறு சுரங்கள்" என்று அச்சிட்டிருக்கிறது.

எந்த வாத்தியங்களைக் கொண்டும் எளிதாய்க் கொட்டத்தக்க விதமாகவும் பலர்கூடி கும்பலாய்ப் பாடத்தக்க விதமாகவும் சுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவரவர் தங்கள் மன உச்சாயப்படி சாஸ்திரத்துக்கு விருத்தமின்றி "களினம்" "சங்கதிகளைச்" சேர்த்துப் பாடவும் கொட்டவுங் கூடும்.

தமிழ்ச் சங்கீதத்திலும் ஐரோப்பிய சங்கீதத்திலும் தேர்ந்த சங்கீத வித்வான்கள் இப்புஸ்தகத்தில் காணக்கூடுமான குற்றங் குறைகளை எடுத்துக் காண்பிப்பார்களேயாகில் பேருபகாரமாயிருக்கும்.

சுதேசக் கத்தோலிக்கு கிறிஸ்தவர்கள் சுவாமியுடைய மேலான மகிமை தோத்திரத்துக்காக இந்தப் புஸ்தகத்தை உதவிக்கொண்டு பாடி வருவார்களேயாகில் இதனை அச்சிட்டுப் பிரசுரம் பண்ணினவருடைய கோரிக்கை சம்பூரணமாம்.

---

* Nota. Dans la musique européenne, les dièses se posent (en commençant par le Fa) par quinte en montant, ou par quarte en descendant. Les bémols se posent (en commençant par le Si) par quarte en montant, ou par quinte en descendant. Ces règles ne sont pas applicables à la musique tamoule.

OBSERVATIONS.

1. Les bémols de l'armure peuvent se transposer ainsi qu'il suit :

Transposition.



Do Re♭ Mi♭ Fa Sol La♭ Si♭ Do — Mi Fa Sol La Si Do Re Mi

(Transposition.) Mi Fa Sol La Si Do Re Mi — Do Re♭ Mi♭ Fa Sol La♭ Si♭ Do

Transposition.



Do Re Mi♭ Fa Sol La♭ Si♭ Do — La Si Do Re Mi Fa Sol La

(Transposition.) La Si Do Re Mi Fa Sol La — Do Re Mi♭ Fa Sol La♭ Si♭ Do

Transposition.



Do Re Mi♭ Fa Sol La Si♭ Do — Re Mi Fa Sol La Si Do Re

(Transposition.) Re Mi Fa Sol La Si Do Re — Do Re Mi♭ Fa Sol La Si♭ Do

2. La mesure à $\frac{7}{8}$ ou சாப்பு தாளம் peut se battre comme celle à $\frac{6}{8}$ ou à $\frac{2}{4}$, mais inégalement ; car il faut compter trois croches au frappé et quatre au levé, exemple :



ஆகமன காலத்தின் பதம்



1(a)

1. எம்மனுவேல்-ஏகநாதா
   எங்கள் பவதோஷத்திர
   ஏனின்னம் வரத்தாமதம் ?
2. பூபதியாந்-தாவிதனின்
   பூங்கொடியின் பூபாலசா
   புல்லோர்களை நல்லோராக்க.
3. ஞானமொழி-நல்லரசே
   நம்பிக்கை யோடண்டி வந்தோம்
   ஞானவழி காட்டிடவே.
4. கானகத்தில்-மோயீசற்கு
   கடுந்தீ முட்செடி தன்னில்
   காட்சிதந்த காதலனே.
5. நீபிறக்க-வான்திறக்க
   நின் கோபத்தின் தீயவிக்க
   நீயுதிக்கும் நாளிதுவே.
6. சத்தியவேதா-பத்திநீதா
   சகலோர்க்கு மாதிதாதா
   சாந்தகுண சேசுநாதா.

இப்புஸ்தகத்திலுள்ள

இராகங்களின் சரளிக்

கிரமங்கள்.

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப்படும் விதம்.	வேறு சுரங்கள்.
சுரஸ்தானம்.				
	ச ரி க ம ப த நி ச்	ச் நி த ப ம க ரி ச		
1. அசாவேரி.				
2. அடாணா.				

இராகம்.	ஆரோகணம். / அவரோகணம். / குறிக்கப்படும் விதம். / வேறு சுரங்கள்.
3. ஹம்சத்வனி.	
4. அமீர்கல்யாணி.	
5. அரிகாம்போதி.	
6. ஆகிரி.	
7. ஆபி.	
8. ஆனந்தபைரவி.	
9. இந்துஸ்தான்காபி.	

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப்படும் விதம்.	வேறு சுரங்கள்.
10. இந்தோளம்.				
11. ஈசமனோகரி.				
12. உசேனி.				
13. எதுகுலகாம்போதி.				
14. எமுனா.				
15. எமுனகலியாணி.				
16. கண்டா.				

இராகம்.	ஆரோசணம். அவரோசணம். குறிக்கப் படும் விதம். வேறு சுரங் கள்.
17. கமாஸ்.	
18. கரகரப்பிரியை.	
19. கலியாணி.	
20. கன்னடா.	
21. காப்பி.	
22. காபிஜில்லா.	
23. காம்போதி.	

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப் படும் விதம்.	வேறு சுரங்கள்.
24. குந்தலவராளி.				
25. குறிஞ்சி.				
26. கேதாரம்.				
27. கேதாரகௌளம்.				
28. சக்கிரவாகம்.				
29. சங்கரா.				
30. சங்கராபரணம்.				

இராகம்.	ஆரோகணம். / அவரோகணம். / குறிக்கப்படும் விதம். / …சுரங்கள்.
31. சரசாங்கி.	
32. சஹனு.	
33. சாமா.	
34. சாரங்கம்.	
35. சாவேரி.	
36. சுதாதரங்கணி.	
37. சுருட்டி.	

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப்படும் விதம்.	வேறு சுரங் [illegible]
38. சுருட்டிமலார்.				
39. சூரியகாந்தம்.				
40. செஞ்சுருட்டி.				
41. சைந்தவி.				
42. சோகவராளி.				
43. செளராட்டிரம்.				
44. ஸ்ரீராகம்.				

இராகம்.	ஆரோகணம். / அவரோகணம். / குறிக்கப்படும் விதம். / வேறு சுரங்கள்.
45. தர்பார்.	
46. தன்னியாசி.	
47. தனுசரி.	
48. தசாவந்தி.	
49. தேவகாந்தாரி.	
50. தேவமனோகரி.	
51. தோடி.	

இராகம்.	ஆரோகணம். அவரோகணம். குறிக்கப்படும் விதம். வேறு சுரங்கள்.
52. நவரோசு.	
53. நாதநாமக்கிரியை.	
54. நீலாம்புரி.	
55. பங்களா.	
56. பந்துவராளி.	
57. பரசு.	
58. பருவா.	

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப் படும் விதம்.	வேறு சுரங் கள்.
59. பிபாஸ்.				
60. பியாகு.				
61. பியாகடை.				
62. பிலஹரி.				
63. பிலாவல்.				
64. புன்னாகவராளி.				
65. பூபாளம்.				

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப் படும் விதம்.	வேறு சுரங்கள்.
66. பூரணசந்திரிகை.				
67. பூரிகல்யாணி.				
68. பைரவி.				
69. மங்களகைசிகம்.				
70. மத்தியமாவதி.				
71. மணிரெங்கு.				
72. மலஹரி.				

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்.	குறிக்கப் படும் விதம்.	வேறு சுரங்கள்.
73. மாஞ்சி.				
74. மாயமாளவிகௌளை.				
75. முகாரி.				
76. மோகனம்.				
77. மோகனகலியாணி.				
78. ரீதிகௌளை.				
79. வசந்தா.				

இராகம்.	ஆரோகணம்.	அவரோகணம்	குறிக்கப்படும் விதம்.	வேறு சுரங்கள்.
80. வசந்தபைரவி.				
81. வராளி.				
82. வாசஸ்பதி.				

தேவதிருப்பாலஸ்துதி.

No. 1.—[12.]* Ton de Re.

சுராஜதி.



* இராகங்களின் சரளிக்கிரம வரிசையில் 12-ம் ஆரோகண அவரோகணங்களின் குறிப்பு.


Presto.
(தில்லானா.) தா தித்தக்
மீ - றி - யே கோ - லம் இ-ழந் - த - வ - னை யீ - டேற் - - - றத் நா-தன்வச
கு குஜேம்த ரி த க ஜேம் ஜேம் த ரி கி ட் க த த க ணந் த ரி த ரி குந் த ரி
னத - தால் தி- ருக் க - ரு- வா - கிய ம - ரி - யா - ளி - டம் பா - தந் த - னை வ - ன ஆ - யர் - கள்
த க தி னு த கி ட தோம் ப ப ப ச ச ச நி த நி ச க ரி ச நி ச ரி நி த ப ம
எ - ழில்சா-ன - வர் ப - ர- வ நல்-லோர்களெல்லோர்க்கும் உல்லா - ச ச - மா - தா-ன மிக வளர்ந்திட
Mæstoso.
தா க த ஜம்தரி கி-டதக தகதிகு திகுதக தகதிமி தோம் தகதித் த ளங்கு தக ததிங்கணதோம் (சரணம்.)
ஞானத் தமரர்கள் பரிஉடன் துதிபுரிந்திடப்புகழ் நிறைந்திடவும் நணிமண்-டலங்கள்ஜெயஜெயவெனவெ ரா - ஜா -
1st.
கள் மூன் - றுபேர்கள் கூ - டி உ - டு முன்னே நா - டி வ - ர வந்-த - னரப் - போ ப - ல


2nd. Fin.
D. C.

No. 2.—[12.] Ton de Re.



1. மின்னுந்தாரகை — விண்ணில்திகழ
மன்னர்மூவர் — வந்துபுகழ
கன்னிமரியின் — உள்ளமகிழ
பண்ணுஞ்சத்திய — வேதம்நிகழ.

2. மாயஅலகை — செய்யகோர
தீயவினைகள் — யாவுந்தீரத்
தூயமுனிவர் — இதயந்தேறக்
கோயில்மகிமை— குகைக்குச்சார.

No. 3.—[67.] Ton de Re.



1. சாவில் ஆதிமனிதர் கர்ம:—கண்டனமுற இன்றுதர்ம, 2. முத்திவானவன் செய்திசாற்ற—முல்லை ஆயர் கண்டுபோற்ற.

No. 4.—[12.] Ton de Re.





1. ஆதிலட்சணநாதா—அமலசத்தியபோதா
மீறு சத்துருதனைச்செயித்து—வெற்றிபெற்றிடும்
நித்திய விநோதா.

2. நித்தியானந்த மூலா—நிகரில்லாஅனுகூலா
சித்தம்வைத்தருள் செய்தெமக்கு—முத்திதந்தருள் உத்தம
பாலா.

No. 5.—[73.] Ton de Fa.





1. வெள்ளைமலை அருகினிலேவிளங்குங் குடிலில்—வளர்
புல்லணை மீதிற்படுத்த—பொன்னொளிபாலா.

2. பரகதிக்கடைதிறந்து விண்ணோர்பரவி துதித்தே—செயம்
பாடி நடமாடவந்த—பாக்கியனேபாலா.

3. மருளலகை பிரண்டோட மார்கழிமாதம்—திகழ்
இருபத்தைந்தாந் தேதி நடு—இரவுதிபாலா.

4. அரசர் மூவர் வந்துகண்டுன் அடிமலர் போற்ற—இந்த
நரர்களை ஏறப் பிறந்த—நவமிகு பாலா.

No. 6.—[22.] Ton de Fa.



1. வெல்லை அருகினிலே—மேவுஞ் சிறு குடிலில்
புல்லணை மீதினில்—தொல்வினை போக்க.
2. அன்னம்மாள் புதல்வி—கன்னிமரி அன்னையின்
உன்னதமகவாக—இந்நிலமீதில்.
3. வானவர் கூடி—மங்களம் பாட
மானமிக எரோதன்—மனநொந்து வாட.
4. மயில் நடம் ஆடக்—குயிலினம் பாடப்
பயிலுமானிடர் துதி—பல ஒலி நீட.

No. 7.—[61.] Ton d' ut.









1. மெத்தமனமாகி என்மேல் - சித்தமிரங்கியே மண்மேல்
முற்றும்புரந்திட நம்மேல் - உற்றகடனாகி வந்தீர்
விண்ணவர் பாட - விஷ மன்னைகள் ஓடச்
செயம் பாடி நீடித் - தேடி நாடியே வந்தேன்.

2. நீரில்லாப் பயிர்போல் வாடிப் - பாரில் மூவாசையால்நீடிச்
சோருந்தே மனந் தள்ளாடித் - திரும்என் துன்பத்தைநாடிச்
சரணம் வந்தடைந்தேனுன் - கருணையை உகந்தேன்
அருள் கூறும் பாரும் - வாரும் சேரும் என்னெஞ்சில்.

No. 8.—[59.] Ton de Fa.







1. மன்னவர் திரை திரையாய் - வந்து பொன்மலர் பெய்து
மங்கள மங்களமெனப்பாடி - ஒன்றாய்க் கூடி
இசை நீடிக் கொண்டாடவே.

2. மாட்டடை குடிலில் மிசு - வதிபவன் போலவே
மரிமைந்தனெனப்பரி பாலன் - அநுகூலன்
மிகுசீலன் தன்பாதமே.

No. 9.—[73.] Ton de Re.





வந்-ததென்ன ஏ-வை அ-ருஞ்செய்பொல்லாச் சென்மப்ப - வத்தைஎல்லாஞ் செகத்தில்து - ரத்தி வெல்-ல.

பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சாணம்.

1. மந்தையைத் தேவரீர் தேடச் - சம்மனசோர்கள்
மங்கள ராகமே பாடக்
சந்தைத் துணியால் மூடக் - கணங்கள் வெருவிஓட
இந்தப்பனியால் வாட - இரச்சந்கொண் டைமை நாட.

2. மாடமண்டபம் இலையோ - நீர் தெய்வீகமாய்
வந்து பிறக்கவில்லையோ
ஆடம்பரம் இலையோ - ஆதரிப்பார் இலையோ
கூடம் இலையோ மாட்டுக் - கொட்டில் உந்தனிலையோ.

No. 10.—[52.] Ton de Fa.

Allegro.



(பல்லவி.) தே-வ-னே நீர் ம-னு-வா-னீ - ரோ எந்-தன் ரோ (அநு.) ஏ-வை ப - மும்-ப-மீசாய்
தி-த-ருத் தாள ம-னு-வா-னீ



பூ-வு-ல-கி-லே வந்-து இ-டை-யர் மா-டை- - - ய - டில் ந-டு-வி-னி-லே. (சா.) அந்- - ரம்





1. மாடமண்டபம் உமக்கே அரிதோ—இந்த
மாடடை குடில் உமக்கே பெரிதோ
ஆடையானது பழம் பீறல் துணியோ—உமக்
கானது கழிப்பட்ட வைக்கோல் அணையோ.

2. வானோர் மங்களத்துதி யேவாழ்த்த—மூன்று
மன்னர் காணிக்கை வைத்துப் பதம்போற்றக்
கோனோர் பசுப்பால் தயிர்கொண்டு பணியத்—தேடிக்
கோபித் தெரோதன் உம்மைக் கொல்லத் துணிய.

No. 11.—[20.] Ton de Mi ♭.





1. ஆரணமெய்ஞ்ஞான—பூரணதியான
காரண நிதான தான - பானமான மோனவான.

2. மாபிரிய முன்ன - காபிரியேல் சொன்ன
திபுரமதன்ன சின்ன - வன்னமின்ன மன்னமன்ன.

3. எந்தை அனுகூலன்—விந்தை மனுவேலன்
அந்தமிகு நூலன்சாலன் - கோலன்சாலன் சீலன்பாலன்.

4. வேதசங்கீதப் பாட்டன்—மெய்யான சுக ஈட்டன்
சோதி மறைநாட்டன் சேட்டன் - தேட்டன் கூட்டன்
கோட்டன் வீட்டன்.

No. 12.—[8.] Ton de Mi ♭.





1. வெல்லை மலையில் பிறந்த பாலனே—அதிக எளிமை
மிகுந்து சூழ்ந்திருந்த பாலனே.
அல்லல்போக்கும் அமல பாலனே—கருணை பொழிந்த
அன்பு நலங்குர் தேவபாலனே.

2. பொங்கு நவங்கள் செய்த பாலனே—இடையர் வணங்கிப்
புகழ்ச்சி சொன்ன ஏக பாலனே.
சங்கைக்குரிய வேதபாலனே—ஒருமை இலங்குஞ்
சமாதானந் தொணர்ந்த பாலனே.

No. 13.—[43.] Ton d' Ut.





பேய் ம-னங்-க-லங்-க இந்தப் -பூ த -ல-முற்-ப-வ வி-னை வி-லங்-க அந்-த-மா - ம-ரி அ-னை கற்-புந் து-லங்-க.

1. விண்டொடுபொற் குன்றிஞேரம் — கந்தரநாற்ய
தெண்படும் அடிவிஸ்தாரம் — தானேசமைந்த
மண்டலந் தனக்காதாரம் — மகாவரத்தைக்
கொண்டுயர்ந்த தெந்தநேரம் — அதனில்திவ்விய
மேலக நவகணத்தின் கூட்டம் — தேவசங்கீதம்
சாலவு மிசைத்தொலி ஆர்ப் பாட்டம் — சபிரியல் மிக்கேல்
சில்மோ டனுசினங் கண்ணோட்டம் — நெறிவழாச்செங்
கோலரசர் மூவர்மன நாட்டம் — மகாவிளங்கும்

விண்டல மண்டலம் - எண்டிசையுந் தொண்டாட
வானவன் சொல்லால்
அண்டர்கள் அண்டையில் - கொண்டு பணிந்து மன்றுடப்
பற்பலவிதப்
புண்டரி கங்கரி - கண்டிரவங்களு நாடப்
பொழில்வாயேவை

பண்டு புரிந்திடு - சண்டித வல்வினை ஓட
உயர் சீனயி
வெற்புற்ற அற்புததச - சற்பனை என்றிடு வரிவேத
முறைப்படிக்கு
மற்பெற்ற பற்பல நடந் - தற்புற்றுயர்ந்திடு சற்பிரசாத
வளமைபெற
வெற்புற்ற அலைகைவஞ்ச - கற்பிதம் அழி தற்பிரபோத
மிக விளங்கும்
சொற்பெற்ற நற்குண நிறை - விற்பன மிகுந்த நவநீத
நெறிதிகழும்
விந்தைசேருமுனி - வளநுளம் இலங்கத்
தந்திரமே புரியும் - பேய் மனங் கலங்க
இந்தப் பூதல்முற் - பவவினை விலங்க
அந்தமாமரி - அனைகற்புந் துலங்க.

No. 14.—[48.] Ton de Re.



(பல்லவி.) ஆ - தி தி - ருச்-கு - மா-ரன் உ - ல - கில் வந் - த அ - தி - ச - யம்





பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சரணம்.

1. கனிவிஷ மாறவோ - கனி அழியாமலே
   கனியாகிய கனிவோ
முனிவன் இசாயாசென்போன் - மொழிநிறைவேறவோ
கனிவயதிற் சிமையோ - னனின கரத்தேந்தவோ.

2. வானவர் இறங்கவோ - மனிதர் வானேறவோ
   வழிதனைக் காட்டிடவோ
கோனவர் பால் தயிர் - கொண்டடி பணியவோ
கொற்றவர் மீறைதூபங் - கொணர்ந்து பொன்னளிக்கவோ.

No. 15.—[1.] Ton d' Ut.

Lento sostenuto.







1. ஆதம் ஏவை செய்த பாவ நாசமாக — வேணுமென்றையன்
அன்னைமாமரியின் கன்னிமையைக்காக்க — காத்திரட்சித்து
அடுத்தார் வடி வெடுத்தார் — புல்லில்
படுத்தார் நன்மை கொடுத்தார் — அங்குள
ஆடுகள் மாடுகள் - பேடுகள் சோடதாய்
அத்தன் கர்த்தன் முத்தன் பத்தன் இவரென
ஆசையோடு பாதம் - அண்டித்துதித்திட.

2. அண்டநவநட்சத்திரம் ஒன்று கண்டுகொண்டு — மண்டலீகர்கள்
தொண்டர்போல எதிர் வந்துநின்றுகண்டு — பொன் மீறை தூபம்
அளித்தார் மனங் களித்தார் — உடல்
தளித்தார் மண்ணாசை ஒளித்தார் — உன்னத
அருமையும் பெருமையும் - பொறுமையும் கண்டாசி
பெற்றார் உற்றார் நற்றார் வைத்தார் அன்பால்
அகமகிழ்ந்துகளி - புகழ்ந்துகொண்டிட.

No. 16.—[12.] Ton de Mi ♭.

Lento.



அந்-த - கா - ர தொந்தம்போ-க - வே ந - ம - தே-க நா - ய - கர் வந்-து-தித்-தார் விந்தை-யா - க வே

1. மாடகூட மாளிகை இகந்தார் — நமதேகநாயகர்
மாடடைத்தகை இனிதென உகந்தார்.

2. கேயமாய்ப்புல்லணையினிற் படுத்தார் — நமதேசநாயகர்
ஆயர்கண்டு பணிந்திட அடுத்தார்.

No. 17.—[51.] Ton d' Ut.

Maestoso 𝄋



(பல்லவி.) பா - - லா ப - ந - சம்-பு கு ணா - சீ - லா ப - வ கண்-டே வே - த நா



லா - - - (அநுப.) மூ - லா மூ - லன் மூ - வு - ல - க - தி - ப - தி மு - த - லி-டை



த - டை - யி - லா முன்னோனே ம - னு அ - னு - கூ - லா ன - னா ரட்-சிக்-கக் கூ - ட கோ



பு - ரம் விட்டுக் கொட்டகந் த - னில்வந்-து இட்-ட - மு - டன் பி - றந்-த கு - ரு - வே அ - ரு - வே



அநுபல்லவி சேர்க்க. 𝄋

1. மன்னுயிரதைமீட்கத் - தன்னுயிரை அளிக்க
மனுவுருவாய்ப் பிறந்த லோலனே
மைந்தர் அனைவோருக்கும் - வானலோகங் கிடைக்க
வந்திடுந் திவ்வியகுண சீலனே
பன்னிரு ராசகுலக் - கன்னி மரி வயிற்றில்
பாலனாகிய காலா காலனே
பரகதி தனை விட்டுப் - பாதி இரவில் இந்தப்
பாரிலுதித்த தனிச் சோலனே
மன்னவர் காத்திருக்க - மாளிகைஅங்கிருக்க
வாடை பனி நிறைந்த - வனத்துகந்தே உதிக்க
அன்னை பீற்றற்றுணியால் - ஆடையாகவே போர்க்க
அதிக வறுமையாலே - அரும் அற்றவர்போலே
அடியோர் எமை - ஆதரிக்கவே வந்தீர்
படிமீதினில் - தரித்திரமே அடைந்தீர்.

No. 18.—[35.] Ton de Re.

Moderato.





1. சந்திரப் பத அணி துதிகூறத் துதிகூறச் — சுத்த
தவமுனி சூசையின் உளந்தேற.
2. கோவலர் பால் தயிர் கொண்டுபணியக் கொண்டுபணிய— மன்னர்
குளிர்மலர்ப் பத மணி முடி அணிய.
3. வனன மயிலினங்கள் நடமாட நடமாட — பல
மாங்குயிலின் குரல் தொனி கீட.
4. அன்னை மரி உவந்து தாராட்டத் தாராட்டத் — தவ
ஐயன் சூசை மகிழ்ந்து சீராட்ட.

No. 19.—[41.] Ton de Fa.

Lento.









கொ-ணர்ந்-த-டி நா - - டப்-பால் கொ-ணர்ந்-த-டி நா - - டப்-பேய்க் க - ணை-மி-ரண்-டோ - ட.

1. மருமலர் பலர் தூவ தெய்வ வந்தனை மேவ — வெல்லை
வரை அருகின் குடிலில் மிரு-வாசம் உலாவ
மிரு வாசம் உலாவத்-தகு நேசமாய்த் தேவ.

2. இரவில் பகல் இலங்கவஞ்ச எரோதன் கலங்க — இந்தத்
தரையில் அதம் ஏவை பவந்-தானே விலங்க
பவந் தானே விலங்க-ரவில் ஞானந் துலங்க.

No. 20.—[52.] Ton de Re.

Allegro.



(பல்லவி.) வல்-ல ப - ரன்ம-னு-வாய் வந்-து பி-றந் - தா-ரி-தோ ஜெ-ய. (அநு-சா.) சொல்ல-ருஞ்சிங் - கா-ரந்



துன்னு ம-லை- யோ-ரம் நல்-ல ஆ-தி வா - - ரம் அல்-லில் ந - டு நே-ரம் ஜெய.

1. வானவர் கூடவே-மகிழ்துதி பாடவே
கோனவர்கொண்டாடவே-குணமன்னர் தேடவே ஜெய.

2. கற்பழியா ஏக-கன்னிமகனுகத்
தற்பர தெய்வீகத்-தனிமுதல் ஏக ஜெய.

3. புண்ணியங்கள் ஓங்கவே-பொய்ம் மதங்கள் நீங்கவே
மண்ணுலகைத் தாங்கவே-மாந்தர்க்கின்பந் தேங்கவே
ஜெய.

4. வளன்மரி மாது-மகிழ்ந்திட ஓது
குளிர்புல்லின் மீது-குழந்தையாயிப்போது ஜெய.

No. 21.—[72.] Ton de Re.



1. விண்ணோர் நடமாட-வெற்றி புகழ் நீட
மண்ணைசெய் பகையைநூற-நண்ணுநரர் கரைஏற.

2. நன்னிலை மாட்டாயர்-நாடி எழில் தூய
பொன்னடி போற்றிக்கொண்டாட-மின்னுமுடிமன்னர்தேட.

No. 22.—[76.] Ton de Re.







1. முத்துக்குடை இலையோ - முரசு செங்கோல் இலையோ
சற்றும் இரதமெனவே - சூரியசந்திரன் இலையோ.
சித்ரப் பூப் பந்தலணி - சிறந்தகொலு இலையோ
இத்தனை பஞ்சகோலம் - எடுத்தீர் பட்ச நிலையோ.

No. 23.—[25.] Ton de Fa.

Cantabile.





1. செயஞ் செயமெனக் கூற — ஞானத்
தெளிவு கொண்டு நாம் தேற
மயல்செய் சத்தரு நீறப் — புண்ணிய
மானவை என்றுமே வீற.

2. உம்மை நாங்கள் கண்டு துதிக்க — மோட்ச
ஒளி முடி சிரம் பதிக்கச்
செம்மை வரங்களால் கதிக்க — ஞானச்
செஞ்சுடர் எங்களுக் குதிக்க.

No. 24.—[40.] Ton de Fa.

Allegro Marziale.





1. புல்லணை மீது-போர்வை இல்லாமல்
சொல்லரும் ஏழைபோல் நீர் — சுவாமீ.
2. ஆடு மாடுகள்-ஆவி கொடுக்கக்
காடைகுயில்கள் இசைக்கச் — சுவாமீ.
3. வானோர் மங்களம்-பாடி வணங்கிடப்
பாலெனளி எனவே நீர் — சுவாமீ.
4. ஆயர் பால் தயிர்-கொண்டே அருகுற
நேய ஆசி கொடுக்கச் — சுவாமீ.

No. 25.—[74.] Ton de Fa.

Adagio.





1. தேஜோமய விலாச நய-செயகுண சீலனே
தேசம் புகழ் ராஜர் தொழும்-திரு மரி பாலனே.
2. அண்டர்களுங் கண்டு தொழும்-அருங்கருணைகரா
மண்டலத்தின் இடர்கெட-வருஞ் சருவேசுரா.

No. 26.—[9.] Ton de Fa.



1. மாட கூட - மண்டபம் இகந்து
வறிஞனைப்போலே - சிறு குகை உகந்து.
2. கோனார் பால்தயிர் - கொண்டு பணிந்திட
வானோர் மங்களம் - பாடி வணங்கிட.
3. சொன்னம் மீறை - தூபமும் வைத்து
மன்னவர் மூவர் - வாழ்த்திட இகத்து.
4. நடுங்கிக் கூளிகள் - நரகினில் ஓட
ஒடுங்கி எரோதன் - உளமிகவாட.

No. 27.—[57.] Ton de Re.





(அநு.) ம - னி - தர் - கள் வா - னு - ல - கி - னில் இ - னி - தா - யு - ற அனைம - ரி - யாய் தி - ருத் - த - ன - யனென்றுய் திற.

பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சாணம்.

1. வானவர் மகிழ்ந்தேத்த — இடையர்கள்
வந்தினி துடன் போற்ற
ஞானிகளாகிய - கோன்களோர் மூவர்கள்
வானுடுக் கண்டுவந் - தோதி வணங்கிட.

2. வெல்லே நன் மலே அடியில் — பல
மிருகமாடடை குடிலில்
நல்லவர் மாமரி - குசை கொண்டாடவும்
வல்லமை போய்ப் பேய் - நரகினில் ஓடவும்.

No. 23.—[40.] Ton de Fa.

Andante.



அ - தி த - யை பா - லா அ - டர் ம - னு கோ - லா ச - ந் த - ன



ந - ளி - ன பொற் ச - ர - ணி - ணக் கே தோத் - திரம்.

1. மன்னர் மூவர் தேடி - மலரடி நாடிப்
பொன்னும்பீறை தூபம்வைத்துப்-புகழ்ந்து கொண்டாட
வந்த.

2. தங்க திருத் தேவ—சுடரொளி தாவத்
தங்கும் புவி எங்கும் நித்திய - சமாதானமாக வந்த.

No. 29.—[63.] Ton de Re.



பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சரணம்.

1. வெல்லைமலைக் குகையில்-புல்லணை மீதில் உடையின்றிக்—
குளிர்
வீச நடு நிசியில்-மாசில் மிருக நடு ஒன்றி—ஆவே
விரைந்தாவி கொடுக்க-வில்-வேடர்கள் வந்தடுக்க
மயிலாடக் குயில்பாடக்-கொண்டாட இசைஒலி நீடப்
பேய்கள் ஓட.

2. விண்டலத்தில் ஒளி-மண்டு தாரை ஒன்று தோண—மூ
வேந்தர் வந்து பொன்-மீறை தூபங் கொண்டு காணச்—
கண்டு
மென்மையான அடியை-வெயில்-வீசும் பொன்முடியின்
மேற்சூட்டச் சூரோட்டக்-கொண்டாட்ட மீட்டுப் பாராட்
டச் சீராட்ட.

No. 30.— [60.] Ton de Re.



பல்லவியும் அநுபல்லவியுந் சேர்ந்து சரணம்.

1. தூதன் இறங்கிவந்து வல்ல—திருச்
சுதன்பிறப்பைத் தெளிவாய்ச்சொல்ல—ஆயர்
காதலுடன் தயிர்மோர் நல்ல—கனி
காய்ச்சு பால்கள் தேடிக்-கடிதினில் அல்லில் ஓடிக்
கமல அடிமுன் வைத்துப்போற்ற.

2. கனிமரியாய் அமுதம் ஊட்ட—அதி
கருணைசேர் சூசையுந் தாராட்ட—உயர்
புனிதமெய்யில் சுகந்தங் கூட்ட—பண்டு
பூதலத்தில் ஆதாம்—புரிபவத்தால் கருணை
பொருந்தி ஆசார மற்றோர்போல.

No. 31.—[18.] Ton de Fa.





1. அண்டர் செங்கோலன் - அருமறை மூலன்
யாவுயிர்க்கனுகூலன் - நய - மேவிய குண சீலன்.
2. பாவ விநாசன் - பரலோக வாசன்
பாசமிகும் நேசன் - வெகு - பூசித சர்வேசன்.
3. மயில்பலவாடக் - குயிலொலி நீட
வண்டினம் இசைபாட - யாருங் - கண்டிடவே தேட.
4. மாமலை அடியில் - மாடடை குடிலில்
மங்குல் இராநடுவில் - துயர் - பொங்கும் கால முடிவில்.

No. 32.—[65.] Ton de Re.





1. பாரில் உயர் தவீ-தரசன் குலத்தினில்
பரிவுடன் ஏவை-பழியைத் தீர்த்திடச்
சிருடன் சிறு-குழந்தை என வந்த
தேவனே சேசுநாயகா-எழுந்திரும் பாலா எழுந்திரும்.

2. ஆதி ஆதி-அனாதி ஆகிய
அளவில்லா அருள்-உடைய சுதனெனும்
நீதியாய் உல-கெங்கும் புகழ்ந்திடும்
நிமலனே சேசுநாயகா-எழுந்திரும் பாலா எழுந்திரும்.

No. 33.—[40.] Ton de Mi ♭.

Moderato.





1. உன்னத பிதாவின் சேயே-அன்னையுந் தந்தையும் நீயே
இங்கிலத்தோர் கதி ஏற-உன்னி நேயமா இங்கு.

2. மாடகூடங்களை நீத்து-ஆடைகந்தைதனைப் போர்த்து
நாடியே மனுவை மீட்கத்-தேடியே அண்டி இங்கு.

No. 34.—[22.] Ton d' Ut.



(பல்லவி.) ஆ - தி மூ - ல னே அ - னை ம - ரி தன் பா - ல - னே னே. (அநுப.) நீ தி - யே பா - ரு



சோ - தி - யே என் - றும் நி - லைப் - பிரக் - கியா - தி - யே எங் - கள்.

பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சரணம்.

1. வேத போதனே - என்றும் - விளங் கதீதனே
நீதனே சற்பிர - சாதனே மிகு
நேய நாதனே—எங்கள்.

2. சேசுநாதனே - எங்கும் - சிறந்த வேதனே
தேசனே பத்தர் - நேசனே ஒளி
திகழ் பிரகாசனே—எங்கள்.

No. 35.—[82.] Ton de Fa.



சு - ரர் தி - ருப் - ப - ர - ன - ர - னு - ரு - வா - யி - னர் தொல் வி - னை



தி - டைக் - க அல் - லி - ர - வ - த - னில்.

பல்லவியும் அநுபல்லவியுஞ் சேர்ந்து சரணம்.

1. வானவர்கள் நாடிட - மங்களம் பாடிடக்
கோனர்கள் பால்தயிர் - கொண்டுகெண்டிடவே.

2. காடை புள்ளினங் - கருகரு வென்று
பாடமயில்நட - மாடவே நவமாய்.

No. 36.—[35.] Ton de Mi ♭.



1. நித்தா அரு நிமலா ஒளிர் - நிருபா நிதம் நிலவும்
சூத்தாத்ம ஸன்வாசா பரஞ் - சுடரே நமஸ்காரம்.

2. அந்நாளில் ஆதாம் ஏவை செய்[illegible]ரிய வினைநீக்க
இந்நாள் மனுவாக வந்த - [illegible]வா நமஸ்காரம்.

No. 37.—[23.] Ton d' Ut.







1. வேந்தர் மூவர் பொன் தூப-மீறை கொண்டு காண
விண்ணில் நட்சத் திரமொன்று-விந்தையுடன் தோணத்
காந்தி மிகுரூபங் கண்டு-கவினுள்ளோர் நாணக்
களிக் கண்ணீர் உற்ற அன்னை-கர்த்தன் அடி பூணச்

சேர்ந்திருந்தவீது கோத்திரம்-செழிக்கும் பெத்லேம்
க்ஷேத்திரம்
சார்ந்திடுஞ் சற்குண பாத்திரம் - தரணியோர் ஞான
நேத்திரம்.

No. 38.—[17.] Ton d' Ut.



1. மந்தைக்காட்டிலே-அவர்-மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத்துணியைப்-பொருந்தச் சூட்டி
மைந்தரை மீட்கும்-தொந்தச்சண் காட்சி — ஆ என்ன
விதை.

2. ஆதாமின் குலமே-இனி-தானாலும் புதுமை
பிதாவின் சினத்தை-தீர்க்க நினைந்ததும்
பிழைகள் அனைத்தும்-போக்க இசைந்ததும் — ஆ என்ன
விதை.

No. 39.—[30.] Ton de Re.





சி - று உ - ரு   எ - டுத் துதிக் - க   இ - தோ   தி - ரு - வுளத் - த - யை பு - ரிந் தார்   தார்.

1. கருதரும் விதமாக - நித்தியக் - கன்னி நல்லனையாக
ஒருபழுதும் இலாத - கற்பில் - உயர்மரி தனைத் தெரிந்தார்.

2. செகவினை தனைத் தீர்க்க - நம்மைச் - சேனுலகதில் சேர்க்கப்
பகலொளி என இருளில் - திவ்விய - பாலக னிதோ பிறந்தார்.

3. தகதகவென வானோர் - இறங்கித் - தாவிதன் குலத்துதித்த
மகவடி தொழுதிறைஞ்சிச் - சுப - வாச்சிய முழக்கினரே.

4. ஜெயஜெய மெனப்பாடி - மரியின் - திருமகன் பதம் நாடி
தயவுள அவர் ஆசி பெற்றுச் - சந்ததம் வாழ்ந்திடுவோம்.

No. 40.—[29.] Ton d' Ut.



(பல்லவி.) தே - வ   திவ்விய   ஜெ - ய   சீ - ல - னே   ஜெய   சீ - ல னே   த - யை   செய்தாளு   மா - ம - ரி



பா - ல - னே. (அநு-சா.)   பூ - வி - னில் ஆ - தம்   புரி - ய - வச் சே - தம்   போக்கி - ட   மா - ட - டை சி - தம்



தா - வி - ய   குடிலில்   தரித்தி - ர   வடிவில்   தற் - ப - ரன் ம - னு - வாய்   வந் - தீ - ரே.

1. வானவர் நாட - மங்களம்பாட
மன்னவர் மூவர்வந்து தேட
கோனவர் தயிர்பால் - கொணர்ந்து கொண்டாடக்
குமரியை அனையாய்க் கொண்டீரே.

2. நீசராம் எம்மை - நேசமாய்க் காக்க
நிலத்தினில் உதித்தீரே நிமலா
ஆசையாய்ப்பஞ்சீர் - அடிதொழும் எமக்கின்
காசினத் தென்றும் அளிப்பீரே.

No. 41.—[17.] Ton d' Ut.



(பல்லவி.) சொல்லச் சொல்லத் தன்-பர்-த-லை-யு - மே. மே (அநு.) சு-கு-ண கு-ண-ல-ய நே-ம-னைச்



செ-க ம-கிழ் சே-செ-னு நா-ம-னே. (சர.) நித்-தி-ய சஞ்-ச-ல முங்-க-ன புத்-தி-யி-லுற்-றி-டு வெஞ்சின



மற்-றி-ட விண்ண-வ-ருந் தி-ன பற்-றி-டத் தே-ஜோன் ம-ய-னென.

1. சுந்தர அந்தரமும் மகிழ்-மைந்தரும் இந்தலமும் நெகிழ். இந்திரி சிந்த வு மந்திசழ்-தந்திடும் எந்தையினின் புகழ்.

2. வையரவின் பவமும் நிதம்-வெய்திடு சங்கடமும் அதற் செய்தருள் பங்கய பொற்பதம் - உய்திடச் செய்தோன் அற்புதம்.

No. 42.—[8.] Ton de Re.



(பல்லவி.) அரி-ய த-யா-ப-ர-னே மெஞ்-ஞா-ன ஆ-று-கு-ஊ -



1. துன்பங்களை அகற்றி - யாருஞ் சுகம் பெற நீ
துன்பங்களுக் குள்ளாக வந்தாயோ
இன்பங்களை எவர்க்கும் - பயக்குந் தயவினாலோ
எளியவனுதவற் - குகந்தாயோ சுவாமி.

2. அடியேன் உயிர்க்குயிரே - அவியா ஞான தீபமே
அருளே அமுதே அறுகுணவானே
படிமேல் தரித்திரனாக - நீ பிறந்ததைக் கண்டு
பதைக்குதென் னெஞ்சமென்ன - சொல்வேனே சுவாமி.

No. 43.—[37.] Ton de Re.

Allegro Marziale.





1. ஆதிலக்ஷணத் தோனுக்கு-ஞான பக்ஷணத்தோனுக்கு
அகில ரக்ஷகனுக்கு-மகிமை தக்ஷகனுக்கு
வீறுமோக்ஷ வாசனுக்கு-வேதவிசு வாசனுக்கு
மாதிலாப் பிரகாசனுக்கு-வல்ல சருவேசனுக்கு.

2. மாமரி குமாரனுக்குத்—தீரனுக்கு மங்களம்
வருஜன கர்த்தனுக்கு-நித்தனுக்கு மங்களம்
பூமருவுந் தாளனுக்குப்-புண்ணிய குணாளனுக்குச்
சேமமிகுந் தோளனுக்குத்-தெய்வ அறிவாளனுக்கு.

No. 44.—[68.] Ton de Mi ♭.



1. சீர்பூத்த மறை ஓங்கித் திகழ நாளும்
தேவபிதாப் பலிபூசை சிறப்புற்றேங்க
நீர்பூத்து மாதமும் மாரிபெய்ய
நீதிவழுவாமல் அரசாட்சி செய்யப்
பார்பூத்த திருச்சபையோர் பெருகிவாழப்
பசுர்ந்திடு நல்லறமேழும் மிகவழங்க
ஏர்பூத்த ரட்சகனே ஆடிரூசல்
ஏசுபிதாப் பாலகனே ஆடிரூசல்.

2. மாதவர்கள் வாசஞ்செய் மடங்கள்வாழ
மகிமை நிறை ஆலயங்கள் மல்கிவாழப்
பூதலமு மீதலம்போல் வாழ உன்றன்
புனித வரப்பிரசாதம் பொழிந்தே எங்கள்
தீதனைத்தையும் பொறுத்துப் புரந்து சாத்தன்
திருவடிக் காளாகவே செய்யச் சேசு
நாதனே நீதனே ஆடிரூசல்
நரதேவ பாலகனே ஆடிரூசல்.

தேவஸ்துதி.



பல்லவியும் அநுபல்லவியுந் சேர்ந்து சரணம்.

1. கருணை நிறைந்த வாரியே—எமக்குனது
கன நயம் பொழி மாரியே
தருணத்துதவுந் திவ்விய-சச்சிதா னந்தநாதா
தரும சத்தியவேத-சாஸ்திர மெய்ஞ்ஞான போதா.

2. ஒளிமிகும் பிரகாசமே—நவவாசமே
உயிரளித்திடும் நேசமே
தெளிபொருள் விளக்கிடும்-திவ்வியகுண புண்ணியனே
தெவிட்டாத பேரின்பத்-திருவளிக்குங் கண்ணியனே.

No. 2.
[40.]



1. பண்டாதா மேவைசெய்-பவந்தனை மறந்தாய்
மண்டலக் கன்னியின்-வயிற்றினில் பிறந்தாய்
தண்டருஞ் சிலுவையில்-தயருடன் இறந்தாய்
கண்டென எமக்கருள்-கருணையிற் சிறந்தாய்.

2. ஆதி அந்தமுமிலா - அரூப காரணனே
சோதி வடிவமாய்த் - துலங்கும் பூரணனே
நீதி நிறைதவன - நியம தாரணனே
சோதில்லா நலமெல்லாங் - கொண்ட வாரணனே.

No. 3.
[70.]



(பல்லவி.) சே-சு-வே சே-சு-வே சே-சு-வே சே - சு-வே சே - சு-வே இ-ரங்-கு-வீ - ரே.



(அநு.) மாசில்லாக் கன்-னியாஸ்திரி மைந்-தரே சுவாமி அற்ப ம-னி-த-ருக்-கு -த-வி செய்தால் ம-கி-மை அல்



ல-வோ எங்கள், (சரணம்.) உ-ல-கஞ்ச - ரீ-ரம்பேய்சத் - து-ருக்கள் எ -னக்-குச் செய்யுங் க-ல-கந்-த



னை-ய-கற்-றிக் காப்-பாற்று-வாரைக்காணேன் எத்-த-னை நான் செய்-தா-லும் சித்-த-மல்-லோபொறுக்கவேணும்.

1. உலகில் என் பாவத்துக்கா - உத்தரித் தணிந்தீர்
சிலுவை மரத்தில் உந்தன் - திரு உடல் தன்னில் சோரி
அனைத்தையும் நீர் சிந்தினீர்
அதில் எனக்குப் பங்கில்லையோ.

2. அளவில்லாக் கிருபையுள்ள - ஆண்டவரல்லோ என்னை
உளமுறச் சுத்தனாக்க - உமக்குக் கூடாததுண்டோ
பாவியை நீர் கைநெகிழ்ந்தால்
தேவரீர்க்குக் குறையல்லவோ.

No. 4.
[6.]



(பல்லவி) வா-ரும் வா - ரும் சுவா - மி என் - னி-த - யத்-தில் வா-ரும்



1. வல்ல பாப்பொருள் நீர்-வராமல் ஈடேற்றம்
இல்லை அதனல் எனை-இரட்சைசெய் தாளவே.
2. வந்தென்றன் இதயத்தில்-வளர் புகர் இருள் நீக்கி
உந்தன் அடிமையாக்கி-உயர்கதி சேர்க்கவே.

3. அப்பம் நின் சரீரமாய்-அதிரசம் உதிரமாய்ச்
சற்பிரசாத மென்றமை-சகல தெய்வீகனே.
4. இரு மூன்றி லட்சணை-இரு நான்கு சற்குணை
ஒரு மூன்றென் ருனவா-உயிர்செக நயகா.

No. 5.
[75.]



1. உன்னடிமை யாகினேனே-நான் - உன்தயவை நாடினே னே - இனி உனதுணை துணையல்லாமல் - வே - றுற்றதுணை காணேனே.

2. பாவக்கடலில் மூழ்கினேன்-உன்றன்-பாதமெனுங் கப்பல் பிடித்தேன்-இன்னஞ்
சாவலா பெலயத்தில் நின்று-முற்றுங்-கரையேறப் பாருஞ் சுவாமீ.

3. ஆணவம் படைத்திருந்தேன் - என்னை-ஆளத்தெரியாமற் போனேன்-ஐயோ
வீணில் என்றன் காலமெல்லாம் - ஒரு - விழலுக் கிறைத் தழுதேன்.

4. பாருலகாசை விடுத்தேன் - மோட்ச-பாக்கியத்தி லாசை வைத்தேன்-ஒரு
பாவி என்றன் ஆத்துமத்தை-உன்றன்-பாதமதிற் சேரும் சுவாமீ.

No. 6.
[17.]



1. பொறுத்துப் பொறுத்து நோகுதே-மனம் வாடிப்
பொங்கிப் பொங்கித்-தாவுதே
மறுக்கவொண்ணு வெறுப்பு-மாருக்சடல்போல் கஸ்தி
டொறுக்கக் கூடவில்லை-பூரணநாதனே.

2. ஏக்கப்பயமுந் தோணுதே-வரவர
இருந்து இருந்து-காணுதே
நீக்கத்தகாமலே-நெருங்கி நெருங்கிச் சூழ்ந்தே
ஆக்கும் பலவீனத்தை-அத்தனே போக்கச் சமயம்.





1. ஐயாயிரத் தொகை மேல்-அடிபட்ட காயம்
ஐயையோ என்பவத்தால்-அடைந்த அநியாயம்
மெய்யண்டி என்பேரில்-விரும்பினிர் நேயம்
மெத்தவும் ஈனனென்றால்-மிகஉண்டோ ஆதாயம்.

2. பாரில் ஆதஞ் செய்வினைப்-பாவத்தால் இருள் மூடிப்
பாழலகைக் கடிமையாம்-பாவி என்னை நாடிச்
சோரி ஒழுகச்சென்னிச்-சொருகுமுள் முடிசூடித்
தோளில் சிலுவைகொண்டு-தொண்டன் எனைத்தேடி.

Cantabile.

No. 8. [12.]





1. நன்றி ஒன்றும் அறியாதவர்-நாங்கள் செய்த பிழைக்கா
நலமேசெய்ய மனுவாய்வந்த-நசரே சேசுநாதா.

2. சற்றும் உன்றன்பயம் இல்லாமல்-சுற்ற மிகப்புரிந்து
சதி அலகைக் காளானோரைத்-தவிர்த்திர் சேசுநாதா.

3. எண்ணிமுடியா தெம்பவம்-இரக்கத்தினாலன்றி
எம்மைப் புரந்தாள ஞாயம்-இலையே சேசுநாதா.

4. தீதுசெய்யும் பகைமூன்றையும்-தீர்த்தே எமைக்காத்தே
திகழும் பரலோகந்தனில் - சேர்த்தாள் சேசுநாதா.

Lento.

No. 9. [46.]





1. புத்தி அறிந்துநான்-செய்பவ மோட்டவும்
புண்ணியபோதம்-உணவென ஊட்டவும்
சித்தமும் வைத்துமூ-வாசையை வாட்டவும்
தீர்க்கமாய்க் கற்பி-னிலைமையைக் கூட்டவும்.

2. என்னும்பரலோக-வாழ்வினுல்லாசனே
எங்கும் வியாபக-மான பிரகாசனே
மண்ணில் அலகையை-மாய்த்திடும் ஈசனே
வானவர் போற்றி-வணங்குநன் னேசனே.

No. 10.
[56.]

Adagio.





1. மறைவனாயி லுரைத்த வாயா—என்
கறையறுத்தாள் பஞ்சஈாயா.

2. புலியும் ஆவு மொன்றித்த தூயா—ஆர்
சலியில் நடனஞ்செய் உபாயா.

Maestoso.

No. 11.
[1.]






பா-ப வி-வா-ர-ண-ருங்-கரு-ணா-க-ரா. (சரணம்.) சி-ர-ம-தில் முண்முடியுந் தோ-ளிற் பெருங்கு-ரு-சும்
தி-ரே-கமெல்லா-நிறைந்த கா-ய-மும் க-ரங்-காலில் ஆ-ணி-க-ளும் மு-கம் உ-மிழ்-நீர்க்கறை-யும்
கன் னிக்-க-ருத்-தி-ருக்-கும் மா-ய-மும் சர-மா-ரி-யா-யிரத்த தா-ரை த-ரை-யில் சிந்-த
சு-ரர் பணியும் ப-ரி-சு-த்த தா-யா உ-மை மிகுந்-த துஷ்டர்கள்தான் வெகு கஷ்டம் வ-ருத்தி-ட
இஷ்-ட பி-தா-வுங்-கை விட்-ட-ன-ரோ வெ-கு சொந்த-ம-தா-கி-ய மைந்-தனென்-றெ அ-வர்
சிந்-தை-யில் உம்-மை நி-னைந்-தி-ட-வில்-லை-யோ.

1. நான்செய்த பாவத்துக்கு-நானல்லோ படவேணும்
நாதா நீர் பாடுபட ஞாயமோ
வானராசாகிய நீர்-மனுவாய்ப் பிறந்துபல
வாதைகொண்டி ரிதென்ன மாயமோ
ஈன மனிதராலே-ஏனுமக் கிந்தக்கஷ்டம்
தீநர கவர்கொண்டால்-தேவரீர்க் கென்ன நஷ்டம்
தேசமெல்லாம் வெகு-நாசம தாயினும்
